# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 58 — 1973 මැයි 04 වැනි සිකුරාදා — 1973.05.04**

58 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மே மாதம் 04 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 429 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 431 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நாளுவித அறிவித்தல்கள் .. .. .. | — |


கவனிக்க.—முத்திரை (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### ஆயுள்வேத திணைக்களம்

*உடைகள் சலவை செய்வதற்கான கேள்வி*

*1973 ம் ஆண்டு ஆனி மாதம் 1 ம் திகதி முதல் 1973 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதி வரையுள்ள காலத்திற்கு வெலியத்த ஆயுள்வேத வைத்தியசாலையில் ஊத்தை உடைகளைக் கழுவிச் சலவை செய்வதற்கான கேள்விகள் இலங்கையரிடமிருந்து 73 05.23 திகதி காலை 10 மணி வரை ஆணையாளர், கேள்விப் பிரிவு, ஆயுள்வேத திணைக்களம், 325, கொட்டா ரோட், கொழும்பு 8 என்ற முகவரியில் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்கள் உடனடியாகத் திறக்கப்பட்டுக் கேள்விக்காரர் முன்னிலையில் அவரவரின் பெயரும் கேள்வித் தொகையும் வாசிக்கப்படும்.*

*2. எல்லாக் கேள்விகளும் இரட்டையாக ஆயுள்வேத ஆணையாளர் 325, கொட்டா ரோட், கொழும்பு 8 என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை ரூபா 10 கட்டுப்பணமாக ஆயுள்வேத ஆணையாளரின் பெயரில் (கொழும்புக் கச்சேரியைத் தவிர்ந்த) ஏனைய கச்சேரிகளிலோ அல்லது ஆயுள்வேத ஆணையாளரிடமோ செலுத்திப் பெறும் பற்றுச்சீட்டைக் கொடுப்பதன் மூலம் ஆயுள்வேத ஆணையாளரிடம்/இக்கந்தோரிலுள்ள அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரம் கிடைக்கப்பெற்றதற்கான உறுதிக் கடிதம் ஆயுள்வேத ஆணையாளரால் அல்லது அவரின் பிரதிநிதியால் ஆணையாளர் காரியாலயத்திற் சமர்ப்பிக்கப்பட்டதற்கு வழங்கப்படும். எவராவது தபால் மூலம் கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்பினால் 1 ம் பந்தியிற் குறிப்பிட்ட முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். "சலவை செய்வதற்கான கேள்வி 1973 ஆயுள்வேத வைத்தியசாலை வெலியாத்த" என்னும் சொற்கள் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டுக் கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை அதன் கடைசித் திகதியின் பகல் 12 மணிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான கேள்விப் பத்திரமில்லாக் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது. கடைசித் திகதிக்குப் பின்னர் பெறப்படும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படமாட்டாது. கடைசித் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்கு எல்லாக் கேள்விகளும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காகத் திறந்து வைக்கப்படும்.*

*4. ஒரு கேள்விக்காரர் கேள்விப் பத்திரத்தை மறு பரிசீலனை செய்ய விரும்பினால் முற்கூட்டியே ஆயுள்வேத ஆணையாளரின்*

### முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
**கொழும்பு,**
***1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ***

அனுசரணையுடன் அவரின் உத்தரவின் பேரில் ஒப்படைக்கப்பட்ட கேள்விப் பிரதியினை மறுபரிசீலனை செய்யலாம்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரர் கேள்வியின் முழுத் தொகையில் ஐந்து வீதத்தைப் பிணைப்பணமாகச் செலுத்தி ஆணையாளருடன் நிபந்தனைகட்கிணங்க ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மற்றும் தெரியப்படாத கேள்விக்காரர்களுடைய கட்டுப்பணம் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டபின் திருப்பிக் கொடுக்கப்படும்.

6. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை இத்திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டபிள்யு. பி. வேலேகம,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
கொட்டா ரோட்,
கொழும்பு 8,
25.04.1973.

5–73—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

### சிறு கைத்தொழில் திணைக்களம்

கொழும்பு கோட்டை லக்சலாவிலுள்ள கலை, சிற்பக் காட்சிக் கூடத்திற் பழுது பார்த்தற்குரிய கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் 1973.5.25 ந் தேதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

2. எந்தவொரு அரசாங்க திணைக்களத்திலும் 10,000 ரூபாவோ அதற்கு மேற்படவோவுள்ள கட்டிட வேலைகட்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கட்கு கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப் படிவங்கள் பெற 1973.5.24 ந் தேதி நண்பகலோ, அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திலோ அன்றிக் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியெதிலுமோ கேள்விக் கட்டுப்பணமாக 25 ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

சோமபால குணதிர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(1/44)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.4.23.

5–79—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

### கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

கழிவுக் கடதாசியை கட்டுகளாக்குவதற்கான கூறுவிலைகள்

பின்வரும் கொள்வனவு நிலையங்களிலுள்ள கழிவுக் கடதாசியை கட்டுகளாக்குவதற்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

(1) இல. 61, ஸ்ராற்போட் அவெனியு, கிருலப்பனை, கொழும்பு-6
(2) இல. 387, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவெனியு, கொழும்பு-14
(3) இல. 419, காலி ரோட், இரத்மலானை
(4) இல. 147-149, கிரன்பாஸ் ரோட், கொழும்பு-14.

மேலும் வேண்டிய விபரங்களை விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

கூறு விலைகளை "கழிவுக் கடதாசி கட்டுதல்" என குறிப்பிட்டு, இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திலுள்ள பொது முகாமையாளருக்கு, 15.5.73 ம் திகதி பி. ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பதிவு செய்துள்ள தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலுரிமை கொடுக்கப்படும்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
த. பெ. 1367,
கொழும்பு-2,
1973 ஏப்பிரல் 10 ம் திகதி.

5–54—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

### கச்சேரி, புத்தளம்

பின்வரும் கட்டு வேலைகளுக்கு/திருத்த வேலைகளுக்கு பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 73.5.24 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்றுக் கொள்வார்.

'புத்தளத்திலுள்ள அரச மனைகளுக்குத் திருத்தங்கள்'

2. புத்தளம் அரசாங்க அதிபரிடம் 73.5.23 ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். புத்தளம் அரசாங்க அதிபரிடமிருந்து இவ்வேலைகள் தொடர்பான எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் அங்கீகாரம் பெற்ற சங்கங்களும் மாத்திரம் கேள்விப்பத்திரங்களை அனுப்பத் தகுதியுடையவராவர். ஒவ்வொரு ரூபா 10/- க்கும் கச்சேரிப் பற்றுச் சீட்டுகளைச் சர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்களை அனுப்பக் கருதுபவர்களுக்குக் கேள்விப்பத்திர படிவங்கள் வழங்கப்படும். கிராம முன்னேற்ற சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விவைப்புப் பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

3. கடித உறைகளில் "புத்தளத்திலுள்ள அரச மனைகளுக்குத் திருத்தங்கள் செய்வதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 73.5.24 ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் புத்தளம் கச்சேரி, அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இந்தத் திகதியில் இந்த நேரத்துக்கு பின்னர் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. 73.5.25 ம் திகதி காலை 10.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் எல்லா கேள்விதாரர்களும் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் வேலை நிறைவுக்கான ஒப்பந்த தொகையில் 5 சத வீதத்தை பிணை வைப்பாகச் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும். அங்ஙனம் அறிவிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் அவ்விதம் செய்யத் தவறுபவர் கேள்வி வைப்புப் பணத்தை இழப்பார்.

5. செய்து முடித்த வேலையின் 90 சத வீதம் வரை பணம் கொடுப்பனவு செய்யப்படும். மிகுதிப் பணமும் பிணை வைப்புப் பணமும் வேலை நிறைவெய்தியதிலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் கொடுக்கப்படும்.

ப. சு. விஜேவீர,
அரசாங்க அதிபர், புத்தளம் மாவட்டம்.

கச்சேரி,
புத்தளம்,
19.4.1973.

5–1—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

(உள்ளூர்க் கேள்விப்பத்திரம்)

### அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களம்

#### தரைக்கு மேலான கம்பித்தொடர்பான பொருட்கள் ஆகியனவற்றினது வழங்கீடு

தரைக்கு மேலான கம்பித்தொடர்பான பொருட்கள் ஆகியன வழங்குவதற்கும், வினியோகிப்பதற்குமான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1, கோட்டை, லோட்டஸ் வீதி, அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகத்தின் 6 ம் மாடியிலுள்ள அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்களத்தின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் கோருகின்றார்.

| விடயம் | | தேவைப்படும் தொகை | பிரித்தானிய தரம் பற்றிய விபரங்கள் |
|---|---|---|---|
| எல். 4 ஸ்பின்டில்ஸ் 8″ × 5/8″ | .. | 12,800 .. | பி. எஸ். ஸ்பின்டில்ஸ் எவ். 24 இல (2) |
| எல். 5 ஸ்பின்டில்ஸ் 9″ × 5/8″ | .. | 4,800 .. | பி. எஸ். ஸ்பின்டில்ஸ் எவ். 23 இல (1) |
| எல். 8 ஸ்பின்டில்ஸ் ஜே ஒற்றை | .. | 2,300 .. | பி. எஸ். ஸ்பின்டில்ஸ் எவ். 26 இல (11) |
| எல். 10 ஸ்பின்டில்ஸ் ஜே இரட்டை | .. | 1,500 .. | பி. எஸ். ஸ்பின்டில்ஸ் எவ். 27 இல (12) |
| எல். 13 ஸ்பின்டில்ஸ் யு ஸ்பின்டில் | .. | 2,700 .. | பி. எஸ். ஸ்பின்டில்ஸ் எவ். 31 இல (21) |
| எல். 14 ஸ்பின்டில்ஸ் யு ஸ்பின்டில் | .. | 1,500 .. | பி. எஸ். ஸ்பின்டில்ஸ் எவ். 32 இல (21) |

2. மேல்கம்பி வரிசை பொருள்களுக்கான 1949 ம் ஆண்டு 16 ம் இலக்க பிரிட்டிஷ் தரத்து விவரக் கூற்றுக்களுக்கு அமைவாகவும், நாகம் பூசுதல் 1971 ம் ஆண்டு 729 ம் இலக்க பிரிட்டிஷ் தரத்து விவரக் கூற்றுக்களுக்கு அமைவாகவும் நாகம் பூசப்பட்டும் மேற்படி அம்சங்கள் உற்பத்தி செய்யப்படவேண்டும்.

3. மேற்கூறிய விடயங்களின் வழங்கீடு சார்பான கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிப்பவர்கள் கேள்விப்பத்திரங்களுடன் மாதிரிப் பொருட்களையும் அனுப்ப வேண்டும். திணைக்களத்தால் உபயோகப்படுத்தப்படும் மேற்கூறிய விடயங்களின் மாதிரிப் பொருட்கள், மருதானையிலுள்ள அஞ்சல் தொலைத்தொடர்புக் களஞ்சியசாலையில் பார்வையிடலாம்.

4. கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும்போது ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு நூற்றுக்கான (100) வீதங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

5. "தரைக்கு மேலான கம்பித்தொடர்பான பொருட்கள் சார்பான கேள்விப்பத்திரங்கள்" என்று மேல் இடது பக்க மூலையில் அடையாளமிடப் பட்ட உறையினுள் கேள்விப்பத்திரங்கள் அடக்கப்பட்டு அதனை பொறியிட்டு, பதிவு மூலம் கேள்விப்பத்திரத் தலைவர், நிர்வாகப் பிரிவு, 6 வது மாடி அஞ்சல் தொலைத் தொடர்புத் தலைமை அலுவலகம், லோட்டஸ் வீதி, கோட்டை, கொழும்பு 1, என்ற முகவரிக்கு 29.5.1973, காலை 10 மணிக்கு முன் கிடைக்கும்வண்ணம் அனுப்பிவைக்கவேண்டும். அல்லது மேற்படி உறைகளை மேற்படி அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலே அதே காலவரையினுள் இடவேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் மூடப்பட்ட அதே நாளில் 29.5.1973 மு. ப. 10 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகள் திறக்கப்படும். உறைகள் திறக்கப்படும்போது அஞ்சல் அதிபர் நாயகமும் தொலைத்தொடர்பு அதிபரினதும் அலுவலகத்திலே விண்ணப்பகாரர் சமூகமளிக்கலாம்.

7. கேள்விப்பத்திரங்கள் எவ்வளவு காலம்வரை செல்லுபடியானதாயிருக்கும் என்பதையும் ஒவ்வொரு விடயமும் எப்போது ஒப்படைக்கப் படும் என்பதையும் கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட வேண்டும்.

8. இதற்கு மேற்பட்ட தகவல்களை பிரதான தந்தித் தொலைத்தொடர்புப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களின் போது பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்படி தொகைகளை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் உரிமை கேள்விப்பத்திரச் சபைத் தலைவருக்குரியது.

நிர்வாகப் பிரிவு,
6 வது மாடி,
அஞ்சல் தொலைத்தொடர்புத் தலைமை அலுவலகம்,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1.

ஏ. ஆர். எம். ஜயவர்த்தன,
அஞ்சல் அதிபர் நாயகமும் தொலைத்
தொடர்பு அதிபரும்.

5–9—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### ஏல விற்பனை

கல்முனை நீதவான் கோட்டிலே பறிமுதல் செய்யப்பட்டதும் கோரப்படாததுமாய் இருக்கும் பொருட்கள் யாவும் 1973 ம் ஆண்டு வைகாசி மாதம் 12 ம் திகதி பிற்பகல் 1 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொருட்களை வாங்குவோர் முழுப்பணத்தையும் உடனடியாக கொடுப்பதோடு வாங்கிய பொருட்களையும் உடனடியாக அப்புறப் படுத்தல் வேண்டும்.

கே. சோமசுந்தரம்,
பிராந்திய நீதிமன்றங்கள் பரிபாலனச் செயலாளர்,
(நீதிமன்றம்) மட்டக்களப்பு.

பிராந்திய நீதிமன்றங்கள் பரிபாலனச் செயலாளர் அலுவலகம்,
மட்டக்களப்பு,
19.4.1973.

5–12—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

### மதுவரித் திணைக்களம்

#### வெற்றுக் காட்போட் பெட்டிகள் விற்பனை

கழுத்துறை, இல. 1, மதுவரி குதத்தில் 1500 க்கும் மேலான (சாராயப் போத்தல் மூடிகள் அடைத்து வரும்) வெற்றுக் காட் போட் பெட்டிகள் ஒன்று ரூபா 1/- வீதம் விற்பனைக்கு இருக்கின் றன. இவற்றைக் கொள்ள விரும்பும் எவரும் பணத்தை இவ்வலு வலகத்தில் செலுத்தி அதற்கான கடிதத்தைப் பெற்றுப் பெட்டி களைக் கழுத்துறையில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

எச். பி. விஜயகோன்,
மதுவரி ஆணையாளர்.

கேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1.
1973—04—18

5–40—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

**1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளப்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர் அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| | ரூ. | ச. |
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ¼ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கலாவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** .. | **6.4.73** | வெள்ளி .. | **28.3.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **11.4.73** | புதன் .. | **4.4.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **19.4.73** | வியாழன் .. | **11.4.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **27.4.73** | வெள்ளி | **18.4.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| **மே** | **4.5.73** | வெள்ளி .. | **25.4.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **11.5.73** | வெள்ளி .. | **2.5.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **18.5.73** | வெள்ளி .. | **9.5.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **25.5.73** | வெள்ளி .. | **15.5.73** | செவ்வாய் | ந.ப. **12.00** |
| **யூன்** .. | **1.6.73** | வெள்ளி .. | **23.5.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **8.6.73** | வெள்ளி .. | **30.5.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **14.6.73** | வியாழன் .. | **6.6.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **22.6.73** | வெள்ளி .. | **13.6.73** | புதன் .. | ந.ப. **12.00** |
| | **29.6.73** | வெள்ளி .. | **20.6.73** | புதன் .. | ந.ப. **12.00** |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.